RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt20321

# எட்டுத்தொகை அக இலக்கியங்களில் வரலாற்றுப்பதிவுகள்

**வி. நாகலெட்சுமி** [அ,*]

[அ] தமிழ்த்துறை, அ.வ.அ. கல்லூரி (தன்னாட்சி), மன்னன்பந்தல், மயிலாடுதுறை - 609 305, தமிழ்நாடு, இந்தியா.

# The Historical records of Sangam's Akam Literature

**V. Nagalakshmi** [a, *]

[a] Department of Tamil, A.V.C. College (Autonomous), Mannanpandhal, Mayiladuthurai - 609305, Tamil Nadu, India.

Corresponding Author: shaluxmi@gmail.com

Received : 04-03-2020
Accepted : 07-06-2020

**ABSTRACT**

The History of Tamilnadu is two thousand years old. The Sangam literature helps to understand the history of ancient Tamil Nadu. As we know, Historical records, stories, and evidences abound in Puram poems of Sangam literature. Although it is about the Akam poems, there are several historical references to know about ancient Tamizhagam. The poets manipulate parables, to make imperceptible to perceptible and making in a way to give pleasure for the adorned. It is the opinion of the authors that, the parables, have been used more in the Akam material than in the Puram material. The parables used in a perceivable way in the Akam literature to convey and express the sentiments and feelings of the chiefs, and for commenting and entertaining of the historical messages. The poets have sung about the three kings (Moovendhars), chieftains (Kurunila mannargal), philanthropists, valor, war, town, country and donations through the expressions and emotions of Thalaivan (Hero), Thalaivi (Heroine) and by the parables. Through the poems, come to know that, the soldiers who died heroically in battle are honored by planting hero stones. The purpose of this article is to illustrate the historical references, sung in the five anthologies of Ettuthogai.

**Keywords:** Sangam, Literature, Akam, Puram, History, Tamizhagam, Hero stone

## ஆசிரியர் குறிப்பு



வி. நாகலெட்சுமி ஆகிய நான் மன்னன்பந்தல் அ.வ.அ. கல்லூரியில் உதவிப்பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரியில் தமிழில் முதுகலை பட்டமும், இலக்கிய இளையர் பட்டமும் பெற்றுள்ளேன். திருவாரூர் திரு.வி.க. அரசு கலைக்கல்லூரியில் நான்கு ஆண்டுகள் பணி அனுபவமும், கூடலூர் பாரதிதாசன் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஒரு வருட பணி அனுபவமும் பெற்றுள்ளேன். தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான கருத்தரங்கத்திற்கு பத்துக்கும் மேற்பட்ட

கட்டுரைகளை வழங்கியுள்ளேன். ஆய்விதழ், மின்னிதழ்களில் நான்கு ஆய்வு கட்டுரைகள் வழங்கியுள்ளேன். மூன்று பணிப்பட்டறைகளில் பங்கு பெற்றுள்ளேன்.

## முன்னுரை

தமிழிலக்கிய மரபில் தனிச்சிறப்புடன் திகழும் சங்க இலக்கியங்களாகிய எட்டுத்தொகை அகம், புறம் என்ற இரு பொருள் பாகுபாட்டில் அமைந்துள்ளது (Rajesh, 2006-2007; Subbiah, 1983). அகம் என்பதில் தலைவன், தலைவி குறித்த தனியொழுக்கம் குறித்து பாடியிருப்பதால் அகநூல்களில் நேரான முறையில் வரலாற்றுச் செய்திகளை புலவர்கள் பாடவில்லை. மாறாக, அகமாந்தர்கள் வாயிலாக வரலாற்றுக்குறிப்புகள் இடம் பெற்றிருப்பதை அறியமுடிகிறது. தமிழகத்தை ஆட்சி செய்த மூவேந்தர்கள், குறுநிலமன்னர்கள், கடையேழு வள்ளல்கள் குறித்த செய்திகளை எட்டுத்தொகை அகநூல்கள் வாயிலாக ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## கடற்கடம்ப வெற்றி

சங்க காலத்தில் சேர நாட்டை ஆண்ட மன்னர்களில் புகழ் மிக்கவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இவன் அரபிக்கடலில் கடற்கொள்ளைக்காரர்களாய் திரிந்த கடம்பர்களை வென்று அவர்களின் காவல் மரமான கடம்ப மரத்தை வெட்டி வீழ்த்தி வெற்றிக்கொடி நாட்டினான் (Gurunathan, 1998). இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கப்பல் படையுடன் சென்று அவர்களுடைய காவல் மரமாகிய கடம்ப மரத்தை வெட்டி அதில் வீரமுரசினை செய்தான் என்பதையும், பண்ணமைந்த அம்முரசின்கண் அடிக்கப்படும்போது மிகப் பேரொலி எழும்பி அதிரும் என்பதையும்,

“சால் பெருந் தானைச் சேரலாதன்
மால்கடல் ஓட்டிகடம்பு அறுத்து இயற்றிய
பண்அமை முரசின் கண் அதிர்ந்தன்ன” (அகம், 347:3-5)

என்று அம்மூவனார் அழகுற பாடியுள்ளார்.

இந்நெடுஞ்சேரலாதன் கடற்கடம்பரை வென்று அவரது காவல் மரமான கடம்பினை அறுத்த போதும், வடவரை வென்று வட இமயத்தே விற்பொதித்த போதும் அந்தந்த போர்களின் முடிவில் இவனால் வெல்லப்பட்ட வேந்தர்கள் இவனுக்கு பணிந்து வந்து இவனுடைய நகரான மாந்தையின் முற்றத்தில் பெருமை சான்ற நல்ல அணிகலன்களையும், பொற்பாவைகளையும், வைரங்களையும் பெருமளவு திறைப்பொருள்களாக குவித்தனர் என்ற செய்தியை,

“வலம்படு முரசின் சேர லாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பறுத்து இமையத்து
முன்னோர் மருள வணங்குவில் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்

ஒன்றுவாய் நிறையக் குவைஇ அன்றவன்
நிலந்தினத் துறந்த நிதியத் தன்ன” (அகம். 127)

எனவரும் மாமூலனாரின் அகப்பாடலடிகளால் அறியலாம்.

## போர்த்திறம்

தலைவன் தலைவியின் அகவொழுக்கங்களில் எழுகின்ற அலர்மொழியின் ஆரவாரத்தைக் காட்டுவதற்கு அவ்வக்காலங்களில் அரசர்களிடையே நிகழ்ந்த போர் ஆரவாரங்களை எடுத்து மொழிகின்ற முறையில் பற்பல நிகழ்ச்சிகள் விளக்கம் பெறுகின்றன. பாண்டியன் நெடுஞ்செழியன், ஆலங்கானத்தில் இருபெரு வேந்தரையும் எழுபெரு வேளிரையும் வெற்றி கொண்ட சிறப்பின் காரணமாகத் தலையாலங்கானத்து செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் என அழைக்கப்பட்டான் (Aranga Ramalingam, 1987; Mayilai. Seeni. Venkatasamy, 2001) இப்போர் குறித்த செய்தியினை,

“அலரே, கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத்து அகன்றலை சிவப்பச்
சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி
நாரகி நறவின் எருமை யூரன்
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் பொருநென்று
எழுவர் நல்வல மடங்க ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்றை
வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே” (அகம், 36:12-35)

எனவரும் அகப்பாடலடிகள் புறப்பாடல்களையும் விஞ்சுகின்ற நிலையில் ஆலங்கானத்துப் போர் பற்றிய விளக்கத்தை அளிக்கின்றது.

கிள்ளி, சென்னி என்பன சோழர்குடித் தோன்றல்களுக்குரிய சிறப்பு பெயர்கள் ஆகும். சோழன் கடுமான் கிள்ளியின் போர்ச்சிறப்பினையும், சோழ நாட்டின் ஆமூரையும், ஓரம்போகியார்,

“பகல்கொள் விளக்கொடு இராநாள் அறியா
வெல்போர்ச் சோழர் ஆமூர் அன்ன” (ஐங்.56: 1-2)

என்று சிறப்பித்து பாடியுள்ளார். இரவை பகலிலிருந்து வேறுபடுத்தி காட்ட முடியாத அளவுக்கு ஆமூர் விளக்குகளின் ஒளியால் அழகு பெற்றுள்ளது என்றும் “ வெல் போர்ச் சோழர் ” என்பதற்கு சோழர் தாம் செய்யும் போர்கள் அனைத்திலும் வெற்றியை குவிக்கும் வீரமுடையவன் என்றும் உணர்த்தும் வகையில் பாடல்வரிகள் அமைந்துள்ளன. மேலும்,

“கதிர் இலை நெடு வேற்கடுமான் கிள்ளி
மதில் கொல் யானையின் கதழ்பு நெறிவந்த” (ஐங்.78:1-2)

என்ற பாடல்வரிகளினால் ஒளியை உடைய இலையை கொண்ட வேலையும், விரைந்து செல்லும் குதிரையினையும் உடையவன் கிள்ளி என்னும் சோழமன்னன் என்றும், இவனுடைய யானைப்படை போர்முறை வழுவாதது என்ற செய்தியினையும் பாடியுள்ளார்.

## கொடைச்சிறப்பு

ஒருவன் கேட்பதற்கு முன்பே அவனது குறிப்பை முகத்தான் உணர்ந்து இதனைக் கொள்வாயாக என்று கூறி கொடுத்தல் உயர்வு என்றெண்ணி பொருள் கொடுத்து உதவிய பெருங்கொடை வள்ளல்களில் ஒருவன் ஆய் அண்டிரன். தன்னை நாடி வரும் புலவர்களுக்கும், இரவலர்களுக்கும் தேரினையும், யானையினையும் பரிசிலாக கொடுத்தவன் என்பதனை,

"விருந்தின் வெண்குருகு ஆர்ப்பின் ஆஅய
வண்மகிழ் நாளவை பரிசில் பெற்ற
பண்ணமை நெடுந்தேர்" (நற்.167:2-4)

என்ற நற்றிணை பாடல் வரிகளினாலும்,

"இரவலர் வரூஉம் அளவை அண்டிரன்
புரவு எதிர்ந்து கொடுத்த யானை போல" (நற்.237.7-8)

எனவரும் வரிகளாலும் தெரிந்து கொள்ள முடிகிறது.

அதியர் குடியில் பிறந்து தகடூரை ஆண்டவன் அதியமான் நெடுமான் அஞ்சி ஆவான். மழை போல வாரி வழங்குகின்ற வள்ளல்தன்மை கொண்டவனாகவும், வீரத்திலே சிறந்தவனாகவும் பாடப்பட்டுள்ளவன். இரவூர் என்னும் ஊரை அதியமான் நெடுமான் அஞ்சி தன் யானைப்படையுடன் சென்று தாக்கினான். அதுமுதல் இரவூர் மக்கள் பலநாள் உறக்கம் கொள்ளாது இருந்த செய்தியினை ஔவையார்,

"ஓவாது ஈயும் மாரி வண்கைக்
கடும்பகட்டு யானை நெடுந்தேர் அஞ்சி
கொல்முனை இரவூர் போல" (அகம் 91, 5-7)

எனவரும் பாடல்வரிகளில் பாடியுள்ளார்.

## அரச மாண்பு

மக்கள் குறைபோக்கி, நீதிநெறி வழுவாமல் தன்கீழ் வாழும் குடிகளை பாதுகாக்கும் காவலனாக இருப்பவனே சிறந்த அரசனாக கருதப்படுவான். அரசன் என்பவன், கடலிலே தோன்றி இவ்வுலகின் இருளைப் போக்கும் சூரியன் போலவும், பகைவர் தம்நெஞ்சம் அஞ்சும்படி கொடுந்தொழில் செய்யக்கூடியவனாகவும், நெடியதாய்த் தோன்றும் மன்னனின் உயர்குடையைத் தம்நிழல் என்று கருதி வந்தவர்களுக்கு காணத்தரும் நிலவு போன்று தண்ணருள் செய்யும் அருளினை உடையவனாகவும், ஒழுக்கத்தால், பரந்த உலகத்தைக் குற்றமின்றி பாதுகாத்து உலகத்தில் அனைவரும் வணங்கி போற்றும் வண்ணம் ஒலிக்கின்ற முரசினை உடையவனாகவும் இருக்கின்ற மன்னவனின் மாண்புகளை,

"ஈண்டு நீர்மிசைத் தோன்றி இருள்சீக்கும் சுடரேபோல்
வேண்டாதார் நெஞ்சுட்க, வெருவந்த கொடுமையும்
நீண்டு தோன்றுயர் குடைநிழல் எனச் சேர்ந்தார்க்கு
காண்தகு மதிஎன்னக் கதிர்விடு தன்மையும்
மாண்டநின் ஒழுக்கத்தால், மறுஇன்றி வியன் ஞாலத்து
யான்டோரும் தொழுதேத்தும் இரங்கிசை முரசினாய்" (கலி, 100:1-6)

எனவரும் பாடல் வரிகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

## குற்றம் கடிதல்

அறக்கருத்துக்களையும், அரச மரபுகளையும் பாடியுள்ள புலவர்கள், நெறி தவறிய மன்னனின் குற்றத்தையும் தன் கவிப்புலமையால் சுட்டிகாட்டியுள்ளனர்.

நன்னன் என்ற குறுநில மன்னனுடைய தோப்பிலிருந்து விழுந்த மாங்காய் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போனது. நீராடுவதற்காக சென்ற ஒளிவீசுகின்ற நெற்றியினை உடைய கோசர்குடியை சேர்ந்த பெண் அந்நீரால்கொண்டு வரப்பட்ட காயை உண்டாள். அச்செயலை குற்றமாகக் கருதிய நன்னன் அந்தப் பெண்ணுக்கு கொலைத்தண்டனை விதித்தான். கோசர்குடியினர் நன்னனிடம் மன்றாடினர். அத்தவறுக்காக அவளது எடைக்கு எடை பொன்னும், எண்பத்தியொரு ஆண் யானைகளை கொடுத்து அவளை விட்டுவிடும்படி கோசர்கள் முறையிட்டனர். ஆனால் நன்னன் அவர்கள் சொல்லுக்கு செவி சாய்க்காது அவளைக் கொன்றான். இத்தகு கொடுஞ்செயலை செய்த நன்னனை,

"மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள் நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ" (குறுந்: 292)

என்று பரணர் கடிந்து உரைக்கின்றார்.

## நடுகல்

வீரத்தைப் போற்றிய சங்கத்தமிழர் போர்களத்தில் புறங்கொடாமல் போர் செய்து வெற்றி பெற்ற வீரனைப் போற்றினார்கள். வீரன் போர்க்களத்தில் உயிர்நீத்தால், அவன் வீரத்தைப் போற்றுவதற்காகவும், அவனை நினைவு கூர்வதற்காகவும் நடுகல் நடும் வழக்கம் இருந்துள்ளது [3]. நடுகல் அமையும் முறையை,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தவென்று
இருமூன்று மரபில் கல்லொடு புணர " (தொல்.பொருள் 63:19-21)

எனவரும் தொல்காப்பிய நூற்பாவினால் அறியமுடிகிறது (Ilampooranaar, 1956). வீரக்கல் நட்டு போரில் உயிர்விட்ட வீரனை நினைவு கூறும் வழக்கம் தொல்காப்பியர் காலந்தொட்டு இருந்தது புலனாகிறது.

நடுகல்லுக்கு மயிற்பீலி சூட்டி, துடியை ஒலித்து, போர்வீரர்களுக்கு மதுபானத்தைப் படைத்து, ஆட்டுக்குட்டியை பலி கொடுத்து இறந்த வீரனை போற்றினார்கள் என்பதனை,

"நுழைநுதி நெடுவேல் குறும்படை மழவர்
முனையாத் துந்து முரம்பின் வீழ்த்த
வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கை கடவுட் பேண்மார்
நடுகற் பீலிசூட்டித் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போர்க்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரம்" (அகம் 35: 4-10)

என்ற அகநானூற்று பாடல் வரிகளில் அம்மூவனார் பாடியுள்ளார்.

## முடிவுரை

அக இலக்கியங்களில் வரலாற்றுப் பதிவுகள் என்னும் இந்த ஆய்வின் வழி முடியுடை மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் அவர்தம் போர்ச்சிறப்பு, கொடைசிறப்பு, வீரம், புகழ் குறித்த செய்திகள் அறியப்பட்டுள்ளன. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடம்பரை வென்ற செய்தி வரலாற்றில் இவனுக்கு பெரிதும் புகழ் சேர்த்துள்ளது என்பதை அறிய முடிகிறது. தலையாலங்கானத்து போர், பாண்டிய வேந்தர்களின் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றிருப்பது புலனாகிறது. தம்மை நாடி வந்த வறியவர்களுக்கு வேண்டுவனவற்றை அளித்து கொடைப்பண்பால் சிறந்து விளங்கிய வள்ளல்களின் திறத்தை அறியமுடிகிறது. அறியாது செய்த தவறுக்காக பெண்கொலை புரிந்த நன்னனின் செயலை சுட்டிக்காட்டி இதுபோன்றதொரு குற்றத்தை இனிவரும் சமுதாயத்தில் எவரும் செய்யக்கூடாது என்பதை வலியுறுத்த நன்னனின் வரலாறு தக்க சான்றாக அமைந்துள்ளது. போரில் மாண்ட வீரர்களுக்கு கல் நட்டு வழிபடும் மரபினை அகப்பாடல்களிலும் காண முடிகிறது. அக இலக்கியங்களிலும் வரலாற்றுச்செய்திகளை அகமாந்தர் கூற்று வாயிலாகவும், உவமைகள் வாயிலாகவும் பாடியிருக்கின்ற புலவர்களின் கூர்த்த புலமையினை அறிந்து கொள்ள முடிகிறது.

## References

[1] V. Rajesh, The making of the ancient Tamil literary canon, Proceedings of the Indian History Congress, 67 (2006-2007) 153-161.

[2] G. Subbiah, King, Kingship and King-Poets in early Tamil akam, Proceedings of the Indian History Congress, 44 (1983) 86-100.

[3] V.A. Gurunathan, (1998) History of Kings in Sangam Literature, Tamil University Publication, Thanjavur.

[4] Aranga Ramalingam, (1987) Sanga Ilakkiyathil Vendhar, 1st Edition, Bharathi Puththagalayam, Chennai University Publication, Chennai, India.

[5] Mayilai. Seeni. Venkatasamy, (2001) History Research in Sangam Literature, 1st Edition, Pulavar Ko Devarasan, Tamil Valarchip peravai publication, Chennai, India.

[6] Ilampooranaar, (1956) Tholkaappiyam-Poruladhigaram, 2nd Edition, Kazhagam Publication, Chennai, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License